**தலைப்பு 231 – கடன் இணக்க சபை திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கடன் இணக்க சபை திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 231 – கடன் இணக்க சபை திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி திணைக்களத்தின் பதிற் கடமையாற்றும் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கடன் இணக்க சபை திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. செயல்நடவடிக்கை திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிராமை.<br>2. மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை | 2.1<br>2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசிக் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | 1. புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை | 2.5 |
| | | 2. இணங்காமைகள் | 2.6 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகதர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதிலான குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(ஊ) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளை களுக்கும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும் | குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.9 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி தொடர்பாக தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் (Activity Plan), நடைமுறைப்படுத்தப்பட்ட காலச்சட்டகம் (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அமைப்பு / பிரதிபலன் (output / outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி கோரிக்கைத் திட்டம் (Imprest Requiremnt Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, அந்த அறிக்கைகளின் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்திக்கமைய 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 9.63 | 7.46 | 2.17 | 22.53 |
| | மூலதனம் | 0.77 | 0.72 | 0.05 | 6.49 |
| | **மொத்தம்** | **10.40** | **8.18** | **2.22** | **21.34** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டெழுபவை | 9.72 | 7.96 | 1.76 | 18.11 |
| | மூலதனம் | 1.25 | 1.06 | 0.19 | 15.20 |
| | **மொத்தம்** | **10.97** | **9.02** | **1.95** | **17.77** |
| 2015 | மீண்டெழுபவை | 11.00 | 8.89 | 2.11 | 19.18 |
| | மூலதனம் | 1.00 | 0.49 | 0.51 | 51.00 |
| | **மொத்தம்** | **12.00** | **9.38** | **2.62** | **21.83** |
| 2016 | மீண்டெழுபவை | 15.89 | 14.96 | 0.93 | 5.85 |
| | மூலதனம் | 0.80 | 0.56 | 0.24 | 30.00 |
| | **மொத்தம்** | **16.69** | **15.52** | **1.17** | **07.01** |
| 2017 | மீண்டெழுபவை | 18.47 | 15.67 | 2.80 | 15.16 |
| | மூலதனம் | 0.85 | 0.74 | 0.11 | 12.94 |
| | **மொத்தம்** | **19.32** | **16.41** | **2.91** | **15.06** |

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டிற்கான 08 செலவின விடயங்களுக்காக ரூபா 2.83 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் அந்த செலவின விடயங்களுக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகையான ரூபா 13.66 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய நிதியேற்பாட்டிலான சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 15 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான வீச்சில் பரந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

திணைக்களத்திற்குரிய 23101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 1.50 | 0.79 | 0.30 | 0.46 | 3.50 | 2.17 |

2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி இடமாற்றம் பெற்றுச்சென்ற பெண் உத்தியோகத்தரொருவரின் ரூபா 40,242 தொகையான கடன் மீதி 2017 நவம்பர் மாத கணக்குகளின் பொழிப்புக்களின் மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அது காசுப் பெறுவனவொன்றாக வருடாந்த இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**2.5 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபக விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்திக்கமைய பதிற்கடமை நியமனமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியது நிரந்தர நியமனமொன்றை மேற்கொள்ளும் வரை தற்காலிக ஏற்பாடொன்றாக மாத்திரமாக இருக்க வேண்டியமையால் நிரந்தர நியமனம் தமாதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், திணைக்களத்தின் செயலாளர் பதவி 2013 மே மாதம் முதல் வெற்றிடமாக காணப்படுவதுடன், அதற்காக நிரந்தர நியமனமொன்று 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், செயலாளர் பதவியின் பதிற் கடமைக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 157,569 தொகை குறித்த உத்தியோகத்தரொருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களத்தில் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்கங்களின் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த திணைக்களத்திற்கு தனியானதொரு உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், நீதிமன்றங்கள் அமைச்சில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு அலகினால் 2017 ஆம் ஆண்டின் போது இந்த திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளக கணக்காய்வொன்றினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவினம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 8.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 01 | - | 01 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 14 | 08 | 06 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 06 | 05 | 01 |
| | **மொத்தம்** | **21** | **13** | **08** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் திணைக்களத்தின் பணிகள் தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான பதவியணி இனங்காணப்பட்டு, அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) பதவியணியினருக்கு பயிற்சியளித்தல்

(i) பதவியணியை உரிய முறையில் பயிற்றுவிக்கும் தேவைப்பாடொன்று காணப்பட்ட போதிலும், திணைக்களத்தின் உள்ளபடியான பதவியணி 13 ஆக இருந்ததுடன், அவற்றுள் 12 உத்தியோகத்தர்களும் எவ்விதமான பயிற்சியையும் பெற்றிருக்கவில்லை.

(ii) கடந்த மூன்று வருடங்களினுள் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 733,875 ஆன நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அவற்றுள் ரூபா 329,850 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மொத்த நிதியேற்பாட்டில் 55 சதவீதமும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது தேசிய நிதியேற்பாட்டில் குறைப்பயன்பாடுடைய பெறுமதியானது 76 சதவீதமாக இருந்தது.

## 2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய அரசின் நிதி, வருமான முத்திரை அல்லது பொருட்களுக்கு பொறுப்பான இருத்தல் அல்லது பொறுப்பேற்றல், அவ்வாறில்லெயெனின் அரசின் பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை இல்லையெனின் பண்டங்களை விநியோகித்தல் தொடர்பில் நிர்வாக ரீதியில் பொறுப்புக்கூற வேண்டிய அல்லது அதிகாரக் கையளிப்பின் அடிப்படையில் அந்த பணிகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், அரசாங்க கணக்கிற்குரிய உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்தும் காசோலைகளில் கையொப்பமிடுவோரும் தமது கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவதற்காக 612 ஆம் அதிகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கமைய பிணை வைக்க வேண்டிய போதிலும், பணம் மற்றும் பண்டங்களுக்கு பொறுப்பாக இருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தரும், உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்தும் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடும் பிரதம எழுதுவினைஞரும், காசோலைகளை வழங்கும் முகாமைத்துவ உதவியாளர் தொடர்பிலும் திணைக்களம் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.